சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம்,
சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515580

**ஆணை நாள் 07.06.2022**

**முன்னிலை**

**திரு மு.ஸ்ரீதர், பி.டெக்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA15118/C/2021**

திரு S. செல்வராஜ் — மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர்/
உதவி செயற்பொறியாளர்/பொது,
பொது கட்டுமான வட்டம்,
தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகம்,
சேலம் - 14. — பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச்சட்டம் பிரிவு 6(1)கீழ் மனுசெய்த நாள் | 13.08.2021 |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | 20.09.2021 |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | 11.11.2021 |
| ஆணையத்தின் அறிவிப்பு நாள் | 09.12.2021 |

******

**ஆணை**

இன்று (07.06.2022) முற்பகலில் தொலைபேசி மூலம் வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மேல்முறையீட்டாளர் திரு S. செல்வராஜ் மற்றும் பொதுத் தகவல் அலுவலர் திருமதி தமிழ்செல்வி, உதவிசெயற்பொறியாளர்/பொது, பொது கட்டுமான வட்டம், தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகம், சேலம் ஆகியோர் பங்கேற்றனர்.

2. மேல்முறையீட்டாளர் 13.08.2021 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கீழ்கண்ட தகவல்களை குறிப்பிட்டு வழங்கக்கேட்டு, பொதுத் தகவல் அலுவலர், தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகம், 6வது மாடி, அண்ணா சாலை, சென்னை என விலாசமிட்டு விண்ணப்பித்துள்ளார்.

- Individual tower wise compensation reimbursed by TANTRANSCO to Kalpataru Power Transmission Limited for each tower from AP 1 to AP 564 and its ROW area.

- Consolidated compensation for the entire project.

3. பொதுத் தகவல் அலுவலரால் தான் கோரிய தகவல் வழங்கப்படாததால் மேல்முறையீட்டாளர் 20.09.2021 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலருக்கும், 11.11.2021 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கும் தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டாளரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (07.06.2022) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையில் மேல்முறையீட்டாளர் தான் தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்த மனுவிற்குப் பொதுத் தகவல் அலுவலரால் இது நாள்வரை தனக்கு முழுமையான தகவல் வழங்கப்படவில்லையென்றும், தான் கோரிய தகவலை வழங்கப் பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடுமாறும் ஆணையத்தைக் கோரினார். இதனை ஆணையம் பதிவு செய்கின்றது.

5. இன்றைய விசாரணையில் ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மேல்முறையீட்டாளர் கோரும் தகவல்கள் குறித்து 17.08.2021 தேதியிட்ட கடிதம் வாயிலாக தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகவும், மேலும் வழங்கக்கூடிய தகவல்களை ஆணைய உத்தரவின் அடிப்படையில் வழங்குவதாகவும் தெரிவித்தார். பொதுத் தகவல் அலுவலரின் வாதுரையை ஆணையம் பதிவு செய்து, விசாரணையின் முடிவில் கீழ்க்கண்ட உத்திரவு பிறப்பிக்கப்படுகின்றது:

1) **இவ்வாணை கிடைக்கப்பெற்ற 30 தினங்களுக்குள் மேல்முறையீட்டாளருக்கு அறிவிப்புக் கடிதமொன்றை அனுப்பி, அலுவலக வேலைநாளில், வேலைநேரத்தில், இதர அலுவலகப் பணிகளுக்குக் குந்தகம் ஏற்படாவண்ணம் அலுவலகம் வரவழைத்து, மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள 13.08.2021 தேதியிட்ட மனுவில் கோரியுள்ள தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகத்தால் வழங்கப்பட்டுள்ள இழப்பீடு குறித்த அனைத்துப் பதிவேடுகள், கோப்புகள் மற்றும் ஆவணங்களைத் தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 2(j)-ன்படி மேல்முறையீட்டாளரின் ஆய்வுக்கு ஆஜர்படுத்தி, ஆய்வு செய்த பின்னர் தனக்குத் தேவைப்படும் தகவலைக் குறிப்பிட்டுக் கோரும் பட்சத்தில், அதனை ஒளி நகலெடுத்து, சான்றொப்பமிட்டு, தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 7(6)-ன் கீழ் கட்டணம் ஏதுமின்றி 100 பக்கங்களுக்கு மிகாமல் வழங்கி, அதனை அவர் பெற்று ஏற்பளிப்பு செய்த விபரத்தை அறிக்கையாக இவ்வாணை கிடைக்கப்பெற்ற 45 தினங்களுக்குள் ஆணையத்திற்குச் சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடப்படுகிறது.**

2) **மேலும், மேற்படி உத்திரவிற்கிணங்க பொதுத் தகவல் அலுவலர் தகவல் வழங்கத் தவறும் பட்சத்தில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு**

**20(1) மற்றும் பிரிவு 19(8)(b) ஆகியவற்றின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அறிவுறுத்தப்படுகிறது.**

**ஒம்/- மு.ஸ்ரீதர்**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**பிரிவு அலுவலர்/ பிரிவுப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA15118/C/2021</u>**
**<u>பெறுநர்</u>**
**<u>பொது அதிகார அமைப்பு</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
உதவி செயற்பொறியாளர்/பொது,
பொது கட்டுமான வட்டம்,
தமிழ்நாடு மின் தொடரமைப்பு கழகம்,
சேலம் - 14.

**<u>மனுதாரர்</u>**

திரு S. செல்வராஜ்,
101, ஈ.வி.கே. சம்பத் நகர் பிரதான சாலை,
ஈரோடு - 638 011

Copy to : Judgement file
AM/PS - 160622